பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P.S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1 | பொள்ளாச்சி, 15—2—51 விலை அரையணா | வெற்றி

பிரதமரின் ஆசி!
சென்னை சர்க்கார் பிரதம மந்திரி கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களின் ஆசி.



திரு. பி. எஸ். வேலுசாமி,
ஆசிரியர், "பொள்ளாச்சி வாசி."

ஐயா, நீங்கள் "பொள்ளாச்சி வாசி" என்னும் வாரப்பத்திரிக்கையை வெளியிடப் போவதை அறியச் சந்தோஷம். தங்கள் பத்திரிக்கை பொள்ளாச்சி வாசிகள் அல்லாமல் மற்ற எல்லாத் தமிழ் நாட்டிலிருக்கும் மக்களுக்கும் பயன் படுமென்றும் நம்புகிறேன். பத்திரிக்கை சிறந்தோங்க என் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

தங்கள்,
பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா.

தலைவரின் செய்தி.
தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. காமராஜ், ஆசி.



ஸ்ரீ பி. எஸ். வேலுசாமி,
பொள்ளாச்சி.

அன்புமிக்க நண்பருக்கு, வணக்கம். தங்கள் தபால் கிடைத்தது. "பொள்ளாச்சி வாசி" ஆரம்ப விழாவிற்கு வர இயலவில்லை. ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களை அழைத்து பத்திரிக்கை திறப்பு விழா நடத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். விழா சிறப்பாக நடக்கப் பிரார்த்திக்கிறேன். மற்றொரு சமயம் பொள்ளாச்சிக்கு வருகிறேன்.

தங்களன்புள்ள,
கே. காமராஜ்.

தொழில் விஞ்ஞானியின் வாழ்த்து.

G. D. Naidu, I. T. Works | A. C. F. R. F. -Ed. | Dated 30—1—51
Gopal Bagh, Coimbatore. | I. T. C.-BM.-Cor.

Dear Friend,

thank you very much for your very kind invitation for the inauguration eremony of the paper "Pollachi Vasi" by the Hon'ble Sri M. Bhakthaatsalam on Sunday the 11th February, 51. May your Weekly thrive for long time and serve the public in a noble way.

To, Sri P. S. Velusamy, Editer.

Yours sicerely,
G. D. NAIDU.

"பொள்ளாச்சி வாசியை" ஆரம்பித்து வைந்தவர்.



சென்னை சர்க்கார் மராமத்து இலா மந்திரி கனம் **ஸ்ரீ எம். பக்தவத்சல** அவர்கள் 11—2—51-ல் நாராயண டா கீஸில் பத்திரிக்கையை ஆரம்பித் வைத்தார்.

விழா விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

டி. எஸ். அவிநாசிலிங்கம் M. L. A.
மாஜி மந்திரி.

அன்பார்ந்த வேலுசாமி,

தாங்கள் "பொள்ளாச்சி வாசி" என்ற பத்திரிக்கை ஆரம்பிப்பது தெரிந்தது. பத்திரிக்கைகள் உயர்ந்த லட்சியத்துடன் வேலைசெய்தால் அதுவே அரிய சேவையாகும்.

ஆண்டவன் அருளால் தங்கள் பத்திரிக்கை சிறப்பாக மக்களுக்கு சிறந்த பாதை காட்டும் வண்ணம் இருக்குமென நம்புகிறேன்.

தங்களன்புள்ள,
அவிநாசிலிங்கம்

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிக்கை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 15—2—51. வியாழன்.

வணக்கம்.

"பொள்ளாச்சி வாசி" என்ற பெயரால்,
நகரில் ஓர் வாரப்பத்திரிக்கை வெளி
_வேண்டும் என்ற, எனது நெடுநாளைய
வல் இன்று பூர்த்தி அடைந்தது. நான்
த்திரிக்கை வெளியிடப் போவதாகத்
தரிந்ததும் அநேகம் நண்பர்கள் தங்கள்
ழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்
ன் மூன்று வருடங்களாக பரிபூர்ண
வில் இருந்ததால் பொது ஜனங்களின்
காடர்பு இல்லாது, மக்களின் மனோபா
தெரியாது இருந்தேன்.

இப்பொழுது பத்திரிக்கை சம்மந்த
க பொதுஜன தொடர்பு கொண்டுள்
ன். நகரில் பல விதசக்திகள் துள்ளி
ளயாடுகின்றன. மக்கள் அதிருப்திப்
ம்படியான காரியங்கள் அனேகம். நேர்
மிக்க ஊழியர்கள் தேவை எனக் கரு
கின்றனர். இன்னிலையில், பொள்ளாச்சி
சி, வெளிவரப்போவது கேட்டு பெரு
ழ்ச்சியுடன் மக்கள் வரவேற்கின்றனர்.
ன்பர்கள் அபரிமிதமான ஆதரவு கொடு
கின்றனர். எதிர்பார்த்ததற்கு மேலாகவே
த்திரிக்கைக்கு சந்தாதாரர்கள் சேர்ந்து
பரும் ஆதரவு கொடுத்திருக்கின்றனர்.
தரவாளர்கள் அனைவருக்கும் எனது
ணக்கம்.

நமது நோக்கம் யாதெனில், குற்றம்
ண்ட விடத்தில் யாராயினும் சரி, குற்
ம் என்றுரைப்போம். அச்சம், தயை,
ாக்ஷண்யமின்றி, ஆணித்தரமான, தலை
ங்கங்களும். நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய
ழல்களையும், தொழிலாளர்களின் குறை
ளையும் தீட்டுவோம். "ஊர் வம்பு" என்ற
லைப்பில் நகரில் நடக்கக்கூடிய செய்தி
ளையும், "தபால் பெட்டி" என்ற தலைப்
ல் வாசகர்கள் எழுதும் பிரசுரத்திற்கு
யக்கான கடிதங்களையும் வெளியிடு
வாம்.

காங்கிரஸ் மகாசபையின் கொள்கை
களையும் திட்டங்களையும் காங்கிரஸ் சர்க்
காரையும் ஆதரிப்பதோடு, காங்கிரஸின்
எதிர்ப்பு சக்திகளையும் காங்கிரஸிலிலுள்ள
புல்லுருவிகளையும் மக்கள் மத்தியில் நிறு
த்தி உண்மையை நேர்மையை கடமையை
நிலைநாட்டுவோம். நகரிலுள்ள அனைவரின்
அன்பையும் ஆதரவையும் பெற்று சிறிய
முறையில் நேர்மையான பாதையில் வழி
தவறாமல் அச்சமின்றி பொள்ளாச்சி வாசி
சென்று அனைவருக்கும் பயன்படுவான்
என்பதை தெரிவித்துக் கொள்வதோடு,
மக்கள் ஆதரவு வேண்டுகிறேன்.

ஜெய் ஹிந்த்!

—○●○—

"பொள்ளாச்சி வாசி"
ஆரம்ப விழாவின் போது
தலைமை தாங்கிய
ஸ்ரீ K. முத்துசாமிக் கவுண்டர்
செய்த பிரசங்கம்.

அன்பு மிக்க பெரியோர்களே!
நண்பர்களே!
கனம் மந்திரி அவர்களே!

இந்த ஆரம்ப விழாவிற்கு என்னைத்
தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்ட
பொள்ளாச்சி வாசியின் நிர்வாகஸ்தர்
களுக்கு எனது நன்றி.

நமது நகரில் ஒரு வாரப் பத்தி
ரிக்கை வெளிவருவது நாம் பாராட்டப்
படவேண்டியதே. நகரிலுள்ள செய்தி
களைத் தாங்கி நேர்மையான முறையில்
பொது ஜனங்களுக்கு பயன் படும் முறை
யில் பொள்ளாச்சி வாசி சேவை செய்யும்
என நம்புகிறேன். தற்போது எங்கு நோக்
கினும் பத்திரிக்கை மயமாய் இரு
க்கிறது. நூற்றுக்கணக்கான பத்திரிக்கை
கள் வெளிவந்துள்ளன. ஆபாசமான வார்
த்தைகளைக் கொண்டு அலங்கரித்து.
தாறுமாறாகத் தாக்கி இழிவான பாஷை
யில் பல பத்திரிக்கைகள் எழுதி வருகின்
றன. இம்மாதிரியான பத்திரிக்கைகளை
சர்க்கார் விட்டு வைத்திருப்பது ஆச்சரிய
மாக இருக்கிறது. இந்தப் பொள்ளாச்சி
வாசியானது பத்திரிக்கை உலகில் சிறந்த
பாதையில் உயர்ந்த முறையில் விருப்பு
வெருப்பு இன்றி கட்சிப் பாகுபாடின்றி
நேர்மையான செய்திகளை கண்ணியமான
முறையில் தாங்கி வெளிவரும் என்று
நம்புகிறேன்.

இந்தப் பத்திரிக்கையை ஆரம்பித்து
வைக்க சென்னை சர்க்கார் மராமத்து மந்
திரி கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்
கள் அன்புடன் இசைந்துள்ளார்கள்.
கனம் மந்திரி அவர்களை அழைத்து தான்
ஆரம்ப விழா செய்ய வேண்டுமென்பது
பொள்ளாச்சி வாசி ஆசிரியர் ஸ்ரீ வேலுசா
மியின் நெடுநாளைய ஆசை. அது இன்று
நிறைவேறுகிறது. பத்திரிக்கை உலகில்
நல்ல அனுபவமும் சர்க்காரின் விளம்பர
இலாகாவைச் சேர்ந்த மந்திரியுமானகனம்
ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் பத்திரிக்கை
யை ஆரம்ப விழா செய்வது மிகவும்
பொருத்தமானது. எனவே, மந்திரி அவர்
களை பத்திரிக்கையை ஆரம்பித்து வைக்
கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

—●○●—

வாழ்த்துச்செய்திகள்.

N. மகாலிங்கம் B. Sc.,
A. B. T. Ltd.,

அன்புள்ள ஸ்ரீ வேலுசாமி அவர்களுக்
நமஸ்காரம். தாங்கள் பொள்ளாச்சி வாசி
என்னும் பத்திரிக்கை ஆரம்பிப்பது குறி
த்து சந்தோஷம். பத்திரிக்கையின் முயற்
சியால் மக்கள் அரசியல் ஞானம் அடை
ந்து தங்கள் கடமைகளைச் செய்து உரி
மைகளை அடைவார்கள் என்று நம்புகி
றேன். இறைவன் அருளால் உங்கள் முய
ற்சி வெற்றி அடையுமாக.

அன்புள்ள,
நா. மகாலிங்கம்.

பி. எஸ். ரங்கசாமி,
காரியதரிசி,
கோவை ஜில்லா காஙகிரஸ் கமிட்டி.

அன்புள்ள நண்பர், ஸ்ரீ வேலுசாமி அவர்
களுக்கு வணக்கம் "பொள்ளாச்சி வாசி"
11—2—51 ல் ஆரம்பிப்பதை அறிந்து
மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஓர்தேச
தொண்டரால் நடத்தப்படும் "பொள்ளா
ச்சி வாசி" யின் சேவை. குறிப்பாக
கோவை ஜில்லாவிற்கும் பொதுவாக
தமிழ் நாட்டிற்கும் சிறந்த முறையில்
பயன்படுமெனபதில் எவ்வித சந்தேகமும்
இருப்பதற்கு இல்லை. தஙகளது பத்திரி
கை தொடர்ந்து எனறெனறும் சேவை
செய்ய வேண்டுமெனபதே என பிரார்
தனை.

அன்புள்ள,
பி. எஸ். ரங்கசாமி

வாழ்த்தும் வரவேற்பும்.

R. Nagarajan. சென்னை,
7—2—51.

அன்புள்ள சேதுராமசாமி அவர்களுக்கு,
"பொள்ளாச்சி வாசி" அழைப்பிதழ் கிடைத்தது. நண்பர் வேலுசாமி வார இதழை ஆரம்பித்து விட்டது மகிழ்ச்சி. ...ாகித விலை, ஜனங்களின் பணப்பஞ்சம், எல்லாவற்றையும் யோசித்துப் பார்ப்பீர் ... என்று உறுதியாக நம்புகிறேன். ...திரிக்கை வளர மனமார பிரார்த்தனை.

இருவருக்கும் நமஸ்காரம்.
நாகராஜன்.

...ர. திருஞானசம்மந்தம்,
ஆசிரியர், "வசந்தம்"
கோவை.

...புள்ள நண்பர் வேலுசாமி
அவர்களுக்கு,

...மஸ்காரம், தங்கள் பத்திரிக்கை நவ...கின் புதுக்குரலாக, இனிய ஒலியுடன் ...ழ்வின் புதிய எழுச்சிக்கு இதய கீதம் ...டும் என்று நம்புகிறேன். சுதந்திர நாட்...ர் அரசியலைக் கூர்ந்து உற்று நோக்கி...ம் தாங்கள், பல ஆண்டுகளாக பாட்...ளி, தொழிலாளி, விவசாயி மக்கட்...ம், ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, தேசத்திற்காக தங்களையே ...பாகம் செய்து கொண்ட தாங்கள், தி...ன ஒழிய, இன்னல்கள் நீங்க பாடுபடு...ர்கள் என்பதில் எனக்கும் நண்பர்களு...ம் பரம சந்தோஷம்.

அன்புள்ள,
ஆர். திருஞானம்.

...V. A. அப்துல்சலாம் அஸாத்,
...ழ்நாடு காக்கிரஸ் கமிட்டி மெம்பர்,
மேட்டுப்பாளையம்.

அன்புள்ள வேலுசாமி, வணக்கம் பல. ...ங்களை ஆசிரியராகக்கொண்ட "பொள்ளாச்சி வாசி" வெளிவருவதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். இன்று நாட்டில் ...த்தனையோ பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. ஆனால் வெகுசில பத்திரிக்கைகளே, நாட்டிற்கும், மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் சேவை செய்கின்றன. சில பத்திரிக்கைகள் ஆபாச அடுக்கு மொழிகளில், அலங்கார வார்த்தைகளால் ...ட்டி இந்நாட்டு இளைஞர்களையும், வாலி...ர்களையும் தப்பான வழிகளில் ...க்கத் ...ண்டுகின்றன. தங்களை ஆசிரியராகக் ...காண்ட "பொள்ளாச்சி வாசி" மனித ...ரிமைக்கு மதிப்புக்கொடுத்து ஜனநாயக ...ைத்யிலே நாட்டின் அரசியல், சமூக, ...ருளாதாரத்துரைகளில் மக்களுக்கும் ...ட்டிற்கும் சேவை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். ஜெய் ஹிந்த்!

தங்கள் அன்புள்ள,
அஸாத்.

வி. சி. பழனிசாமி கவுண்டர் எம். எல். ஏ
தலைவர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி,
கோவை.

ஸ்ரீ பி. எஸ். வேலுசாமி அவர்களுக்கு,
உபயக்ஷேமம், தங்களுடைய அன்பார்ந்த "பொள்ளாச்சி வாசி" ஆரம்ப விழா அழைப்பு பத்திரம் கிடைத்தது. வந்தனம், இதர வேலைகளால் நான் ஷை விழாவிற்கு வரமுடியாமல் இருந்தாலும், என்னுடைய வாழ்த்துச் செய்தி எழுதியுள்ளேன்.

"பொள்ளாச்சி வாசி" என்னும் வாரப் பத்திரிக்கை மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து தேசம் முன்னேறுவதற்கு ஒரு உறுதுணையாக பயன்படவேண்டுமென்று வேண்டுகிறேன். ஜெய் ஹிந்த்!

அன்புள்ள,
வி. சி. பழசாமி கவுண்டர்,

வே. ந. ஆறுமுகம் பி. ஏ. (ஆனர்ஸ்)
தலைவர், தாலூக்கா ஹரிஜன சேவா சங்கம், பொள்ளாச்சி.

அன்பார்ந்த வேலுசாமி அவர்களுக்கு,
வணக்கம். தாங்கள் "பொள்ளாச்சி வாசி" எனும் பத்திரிக்கை ஆரம்பிப்பதைப்பற்றி மிக சந்தோஷமடைகிறேன். தங்கள் பத்திரிக்கை சர்வோதய இயக்கத்திற்கு குறிபாக ஹரிஜன சேவைக்கு அரும்பணியாற்றுவதுடன் கலப்பற்ற உண்மைச் செய்திகளையும் மக்களுக்களித்து விழிப்படையச் செய்யவேண்டுகிறேன். தங்கள் சேவையின் சாயல் பத்திரிக்கையின் வாயிலாக மிளிருமாக எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. அன்பு

வே. ந. ஆறுமுகம்.

விஜயா டைமண்ட்ஸ்.
ஒரிஜினல் ரங்கூன் கமலங்கள்,
திருச்சி கமலங்கள், நீலம்,
சிகப்புமுதலிய கற்களும், சீமை
அரம் வாள்தகடு முதலிய எல்லா
விதமான பட்டறை சாமான்களும்
கிடைக்கும்.
R. கிருஷ்ணன்,
ஷராப் வியாபாரம், எஸ். எம். ஜோசியர்
தெரு, பொள்ளாச்சி.

தியாகிகள் பிரச்சனை தீரவில்லையே!

(வாசு.)

அரசியல் தியாகிகளுக்கு 5-ஏக்கர் நிலம் கொடுக்கப்படும், என சர்க்கார் அறிவித்து, சுமார் 4—ஆண்டுகள் ஆகிறது. சர்க்கார் செய்தி பார்த்தவுடன் இந்நகர், தாலூக்காவிலுள்ள சுமார் 40—தியாகிகளும் நிலம் குறித்து விண்ணப்பம் செய்து கொண்டனர். ஆனால் குறிந்த பூமி கொடுக்க முடியாது, என்ற பதில் எந்த பூமியைத் தியாகிகள் குறித்துப்போட்டாலும், அந்த பூமி கொடுக்கமுடியாது என்று தாசில்தாரிடமிருந்து பதில் வரும். காலை கெம்பர் வாங்கவும், பூமிகள் தேடவும் தியாகிகள் ஒவ்வொருவரும் 500-ரூபாய் முதல் 2000-ரூபாய் வரை செலவு செய்திருக்கின்றனர். ஆனால் இதுவரை யாருக்கும் பூமி கொடுக்கப்படவில்லை. ஸ்ரீ கந்தசாமிக் கவுண்டர் எம். எல். ஏ. க்கும் காந்தி ராமசாமிக்கும் கொஞ்சம்நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 4, 5-பேர்களுக்கு பூமி சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது, பெரும்பான்மை யோருக்கு இன்னும் பூமி கொடுக்கப்படவில்லை. வீண் சிலவும், அலைச்சலும், அவதியு... பட்டு, தியாகிகள் சலித்து விட்டனர். பூ... வேண்டாம் சிலவு செய்த தொகை கிடை... தால் போதும் என்ற நிலைமைக்கு வந்து விட்டனர்.

சமீபத்தில் ஸ்ரீ கந்தசாமி கவுண்டர் ம...திரி அவர்களை அழைத்து வந்து பாரஸ்... பூமிகளை காட்டி அதையாவது கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார், தியாகிக... சார்பில். ஆனால் அதுவும் கிணற்றில் வி...ந்த கல் மாதிரி இருக்கிறது. இந்த 4-வ...ஷத்தில் நூற்றுக் கணக்கான தியாகிக... கூட்டமும் மகாநாடுகளும் நடந்துவிட்ட... வீண் சிலவைத் தவிர பயன் ஒன்றுமில்...

கொஞ்ச காலமாக தியாகிகட்கு பூ... வாங்கிக் கொடுக்க நம் தாலூக்கா... பொருத்த மட்டிலும் எம். எல். ஏ. ஆ...ளவு கவனம் செலுத்துகிறார். இப்போ... புதியதாக வந்துள்ள தாசில்தாரும் க...னம் செலுத்தினால் விரைவில் பூமி கி...க்கும் என்று தியாகிகள் நம்புகின்றன... இந்த நம்பிக்கையை தாசில்தாரும் எம். எல். ஏ. யும் தியாகிகள் சங்கத் தலைவரு... நிறைவேற்றினால் நலமாயிருக்கும்.

நேர்த்தியான சாப்பாடும்!
சுவை மிக்க பிரயாணியும்!
சுகாதாரமுறைப்படி தயாரிக்கும்கடை:-
பட்கல் இஸ்லாமியா,
ஓட்டல் & டீ கிளப்,
P. A. மகமத்கோயா & பிரதர்
மார்கெட் ரோடு,
பொள்ளாச்சி.

உலகப் பிரசித்தி பெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P A ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A K யாகூப்சாயபு

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

போன் 42. தந்தி: டிரேடிங் கோ.

எக்கோ ரேடியோக்கள்.

கோவை ஜில்லா வினியோகஸ்தர்கள்:

P. S. வைத்தியநாத்,

ரேடியோ எஞ்சினியர், பொள்ளாச்சி.

&

P. S. வைத்திய நாத் & கோ,

ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்,

8-59 ஜெயில் ரோடு, **கோயமுத்தூர்.**

குறிப்பு:— எல்லாவிதமான ரேடியோக்களும் குறைந்த சார்ஜில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

போன் நெ[illegible]3.

கிருபாஜ[illegible]ரிமார்ட்

Pro: S. G. சந்தான[illegible]ர செட்டியார்

EST[illegible]

பொ[illegible]சீ

உத்திரவாதத்துடன் பவுன் நகைகளும்,
வெள்ளிப்பாத்திரங்களும் கிடைக்குமிடம்

Edited & Publishe[d b]y P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.